[illegible]

[illegible]

[illegible]

M30·12·3

210784

REGD NO: M 1530.
"BALAVINODHINI"
CHILDREN'S FRIEND
பாலவிநோதினி
குழந்தைகளின் அன்பன்.
ஆசிரியர்:
வரகவி.திரு. அ.சுப்பிரமணியபாரதி.
Vol XII MARCH 30. No 3
PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

The Subscribers are requested to pay subscriptions to
on obtaining our Bonafide receipts.

hts Reserved by the Publishers.

பாலவிநோதினி

NTENTS—பொருளடக்கம்

பக்கம்.

ணக்கம் 97
தசம் ... ... 98—99
ர் எனக்கு நீ தம்பி ... 100—107
தன் மோகன் மாளவியாவும்
ந்து சர்வ கலாசாலையும் ... 108—111
ாவம் அல்லது இரண்டு
ர் ... ... 11?—119
த்து ... (தொடர்ச்சி) 120—124
... ( ) 125—135
அதிகஷ்டம் (,,) 136—140
திருவிளையாக்கும் .... 141—142
கொண்டு பேசுவது ...
... ... 143—144

—எமது கம்பெனி கையொப்பமிட்ட எமது
கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையை
ருகிறோம். எமது ரசீது இல்லாமற்பணம்
டமாட்டாது.

பண்டித மதன் மோஹன் மாளவியா.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 12	1930 ௵ மார்ச்சு மாதம்	பகுதி 3

21078

தெய்வ வணக்கம்

கோடிக் கணக்கான தேவர் முத்தேவர் தங்
குறையிரந் தேத்தி வாழ்த்த
கொடிய வசுரேசனுடல் கூறுபட வேல்விட்ட
கோதற்ற குமரேசனே
வேடிக்கையாடி வெகு காவடிக்காரர் வர
வேண்டுவரம் நல்கியாளும்
மெய்யான தெய்வம் நீ கண் கண்டதிதுவதால்
வேறு துணை நாடமறியேன்
மூடிப் படர்ந்த அக்ஞான விருளிரியவோர்
மூரிக்கலாப மயிலில்
மூவிராதித்தர் நேர்வதன வொளிவீச வென்
முன்புவந் தாதரித்தாள்
பாடித் துதிப்பவர்க் கமுதமய மாய்க்கருணை
பாலிக்கு மின்ப வடிவே
பழமறைகள் தருசீல மழவிடையர் அருள்பால
பழநிமலை முருகேசனே. (பாரதி)

லகம் 600 038

ஹிதோபதேசம்

(1) கோடி கூடி வருவதாயினும் பொய் சொல்வது கூடாது. பிறர் பொருளைத் திருடுவது கூடாது. உடம்பு மெலியு மென்று கருதி மாமிசம் உண்பது கூடாது.

(2) அறிவு தரும் நல்ல நூல்களைக் கற்றவர் தேவர்க்கு நிகராவார்கள். கல்லாதவர் பிசாசுகளுக்கு நிகராவர். முதுமைப் பருவம் வருவதற்கு முன்பே பொருள் தேடி வைத்துக் கொள்ளாதவர் அறிவிலாரே யாவர். முன்னே செல்வரா யிருந்தபடியால் துன்பமில்லாதவ ரானோம். அழகுடையவரா யிருக்கிறோம் என்று கூறுகிறவர் இருகால் எருதுக்குச் சமானமாவர்.

(3) திருடாமலும், சூதாடாமலும், கீழ் மக்களிடம் நட்புக் கொள்ளாமலும், பிறர் மனம் வருந்தும்படி வன்சொல் வழங்காமலும், மாமிசம் உண்ணாமலும், ஒருவனிருப்பானானால், அவன் மீண்டும் இப்புவியிலே பிறப்பை யடைய மாட்டான்.

(4) பூவாமல் காய்க்கும் மர மிருக்கிறது. அதுபோல் அறிவுடையார் வயதில் பெரியவராகா விட்டாலும் அறிவினால் பெரியவராய் விளங்குவர். நூல்களைக் கற்ற விற்பன்னரும் அத்தகையரே யாவர். பாத்தி கட்டி விதைக்காமலே முளைக்கும் வித்து மிருக்கிறது. அதுபோல் அறிவுடையார்க்குப் பிறர் அறிவியாமலே அறிவு தானே தோன்றும்.

(5) பூத்தாலும் காய்க்காத மர மிருக்கிற தல்லவா? அதுபோல் நன்மை அறியாதவர் வயதில் முதிர்ந்திருந்தாலும் அறிவிலே முதிர்ச்சி பெறார். அறிவு நூல்களைக் கற்றுத் தெளியாதவரும் அத்தகையரே யாவர். பாத்தி கட்டிப் புதைத்தாலும் முளைக்காத வித்து முண்டு. அதுபோல் அறிவில்லாதவர்க்குப் பிறர் சொன்னாலும் அறிவுண்டாகாது.

(6) நல்ல குணமுடையவரோடு சிநேகங் கொள்ளுங்கள். பிறர் பொருளைத் திருட மனத்திலும் நினைக்க வேண்டாம். தீயகுண முடையவர்களை விட்டு விலகுங்கள். கெட்ட சொற்களைச் சொல்ல அஞ்சுங்கள். யமன் வருவது நிச்சயம். இது வீண் வாய்ச் சொல்லல்ல.

(7) தூக்கணங் குருவியினாற் செய்யப்படும் கூண்டும், பேரெறும்புகளாற் செய்யப்படும் அரக்கும், உலண்டு என்னும் புழுக்களால் நூற்கப்படும் நூலும், இன்னொரு வகைப் புழுக்களால் செய்யப்படும் கோற்கூடும், தேனீக்களால் திரட்டப்பட்ட தேன் பொதியு—ம்ஆகிய இவ்வைந்தும் யாராலும் செய்தற் கரியவை. ஆகையினால் எல்லாங் கற்ற வல்லவருங் கூடத் தமக்கு இவை செய்தல் கூடும் என்று இறுமாப்படையார். பார்க்கப்போனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செய்கை எளிதென்பதே புலப்படும்.

இன்றுதான் எனக்கு நீ தம்பி

உலகத்தில் மக்களாய்ப் பிறந்தவர்கள் தங்கள் குலப் பெரியாருடைய பெயரை உலகத்துப் பெரியார் போற்றத்தக்க செய்கையினால் நிலை நிறுத்த முயல்வது அறிவுடைமை யாகும். இத்தகைய அபூர்வ குணங்கள் அமையப் பெற்றவர்கள் தோன்றுவ தரிதாகவே இருக்கும்.

பண்டைக் காலத்தில் நம்முடைய தேசத்தில் அத்தகைய அரிய குண மணிகள் விளங்கியதாகப் பண்டைக்காலச் சரித்திரங் கூறுகிறது. சரித்திரங் கூறுவதற் கேற்றபடி அவர்களை இன்றும் உலகம் போற்றுகின்றது. ஸ்திரீகளுக்குள்ளும் அவர்களுடைய செய்கைகள் பழமொழிகளாக வழங்கப் படுகின்றன.

முன் காலத்தில் பாண்டவரென்றும் கௌரவரென்றும் சந்திரவம்ச ராஜ குடும்பத்தினர் இருவர் இருந்து வந்ததாகவும், அவர்களுக்குள் துரியோதனன் என்பவனைத் தலைவனாகக் கொண்ட கௌரவர்க்கும், தருமர் என்பவரைத் தலைவராகக் கொண்ட பாண்டவர்க்கும் பகை யேற்பட்டுப் பாண்டவர் வனவாசம் செய்ததும், பின் துரியோதனன் நாடு கொடுக்க மறுத்ததன்பேரில் அவர்களுள் போர் தொடங்க நிச்சயிக்கப் பட்டதும் அநேகமாக எல்லோரும், வாசித்தாவது கேட்டாவ திருத்தல் கூடும்.

அவர்களுடைய சரித்திரமே பாரதம் என்னும் இதிகாசம். இந்த இதிகாசம் நமக்குப் போதிக்கும் நீதிகள் அளவிறந்தன. ஆதலினால் அதனைப் பெரியார் ஐந்தாவது வேதமென்று புகழ்கிறார்கள்.

பாண்டவர்கள் வனவாசம் முடித்து வந்ததும், நாடு கேட்டபோது துரியோதனன் கொடுக்க மறுத்தபடியால் போர் நடத்துவதென்கிற தீர்மானம் செய்யப்பட்டது. அப்போது போர் தொடங்குவதற்கு ஒரு நாள் நிச்சயிக்க வேண்டியதாயிற்று. துரியோதனன் அதுபற்றிப் பெரியாரிடம் சபை கூட்டி ஆலோசனை செய்தான்.

துரியோதனனுடைய பாட்டனாரும் பெரியாரும் சகல சாஸ்திர விற்பந்நருமாகிய பீஷ்மர் என்பவர், "பாண்டவரில் கடைசியான சகாதேவன் என்பவனே நாள் வைத்துத்தரத் தகுதி யுடையவன்" என்றார்.

துரியோதனன் அதைக் கேட்டதும் பீஷ்மரைப் பார்த்து, "என்ன ஆச்சரியமிது! பாண்டவர் யார்? எனக்குப்பகைவரல்லவா? அவர்களில் ஒருவனான அந்தச் சகாதேவன் எனக்கு ஜயம் உண்டாகும்படி நாள் வைத்துத் தருவானா? இது நடக்கக் கூடியதா? ஏன் இப்படி கூறுகிறீர்?" என்று கேட்டான்.

பீஷ்மர், "அப்பா! நீங்கள் பேதா பேதம் நினைப்பீர்கள். அவர்கள் அப்படி ஒருகாலும் நினைக்க மாட்டார்கள். நீ மாத்திரம் நேரிலே போய்க் கேட்பாயானால், சந்திர சூரியர் மாறி நடந்தாலும் தங்களுடைய சத்திய வாய்ச்சொல் தப்பாத அவ்வுத்தமர்களில் சிறி

யவனாகிய அவன் உனக்கு உண்மையையே சொல்வான்" என்று கூறினார்.

அப்பால் துரியோதனன் அவனிடமே நாள் வைத்துக் கொண்டு வரத் தீர்மானம் செய்து, ஒரு நாளிரவில், பிரம்பினாற் செய்த சூத்திர அன்னப் பறவை மீதேறி ஆகாய வழியே சென்று சகாதேவனுடைய அரண்மனையிலே போய் இறங்கினான்.

சகாதேவன் துரியோதனனுடைய வரவறிந்ததும், எதிர்கொண்டு வந்து வரவேற்று வந்தன உபசரணைகள் செய்து, "ஏது இவ்வளவு தூரம் இரவில் வந்தது? அடியேனால் ஆகவேணடிய தென்ன?" என்று கேட்டான்.

துரியோதனன், "தம்பி சகாதேவா! இப்போது யுத்தம் புரியத் தீர்மானித்திருக்கிறோமல்லவா? இந்த யுத்தத்தில், தருமராஜனுடைய தலையற்று விழவும், எனக்கு ஜய முண்டாகவும் வேண்டும். அதற்கேற்ற நாள் ஒன்று வைத்துத் தரவேண்டும். அதற்காக உன்னிடம் வந்தேன். நீயே பேதம் பாராட்டாமல் நடப்பவனென்று பெரியார் கூறினார்கள். ஆகையினாலே தான் இந்த இரவில் ஒருவரையும் அறியாமல் சூத்திரப் பறவையில் வந்தேன். எனக்கு வெற்றியை விரும்பி இந்த நன்மையைச் செய்யக் கடவாய்" என்றான்.

சகாதேவன் இதைக் கேட்டதும் "இவ்வளவுதானா? இதற்கென்னப் பிரமாதம். தங்களிஷ்டப்படியே நாள் வைத்துத் தருகிறேன். கவலைப்பட வேண்டாம்" என்று கூறித் துரியோதனனுடைய

கால பலத்தையும், திசா நாதன், புத்தி நாதன், அந்தர நாதன் இவர்களுடைய பலா பலத்தையும், ஜயா ஜயத்தையும் ஆலோசித்து, சாஸ்திரங்களை யெல்லாம் ஆராய்ந்து, "அண்ணா! தேவரீருடைய இஷ்டப்படி வெற்றிபெற வேண்டுமானால், நாளை மறுநாள் பூரண அமாவாசை அன்றிரவு ஒன்பது நாழிகைக்குமேல் குருக்ஷேத்திரத்திற்குச் சேனை செல்லும்படி முகூர்த்தம் கொண்டு, அப்போதே களப்பலியுங் கொடுத்துப் பராசக்தியைப் பூசித்து ஆயுத மெடுப்பீரானால், தருமராஜன் தலை தப்பாது அற்று விழும். இதிற் சிறிதும் ஐயங் கொள்ள வேண்டாம். அப்பால் தெய்வ சித்தம் எப்படியோ நானறியேன்" என்று கூறினான்.

துரியோதனன் சகாதேவனிடம் சந்தோஷங் கொண்டு "உன்னைப்போல் நியாயவாதியையும் உண்மையுடையவனையுங் காண்பதரிது. உன்னுடைய பெருந்தன்மைக்கு மகிழ்கிறேன்" என்று கூறி விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

இப்படி சகாதேவனிடம் இரகஸ்யமாய் நாள் வைத்துக் கொண்டு போனதைக் கிருஷ்ணமூர்த்தி தெரிந்து கொண்டார். அவர் எல்லாம் உணரவல்ல இறைவனல்லவா? அவர் பாண்டவர்களுக்குச் சகாயம் செய்ய முன்வந்திருப்பவர். ஆகையால் அவர் அந்தத் தீர்மானத்தைத் திருவுளங் கொண்டார். அவர் அப்படிச் செய்வது அவருடைய கடமை. ஏனென்றால், பாண்டவர்கள் அவரைத் துணையாகக் கொண்டிருக்கும் அவருடைய அன்பர்களல்லவா? சகாதேவனோ சகல சாஸ்திர வல்லவன். அவன்

வைத்துக் கொடுத்த நாளின்படி யுத்தந் தொடங்குமானால், வெற்றி துரியோதனனுக்கே கிடைக்கும். இது நிச்சயம். இதனால் கோபால கிருஷ்ணமூர்த்தி பெரிய வருத்தங் கொண்டவர்போல் நடித்துத் தருமபுத்திரரை அழைத்து, "தருமநந்தனரே! துரியோதனன் முதலிய பகைவர்க ளெல்லோரும் அடியோ டழிய வேண்டு மென்று நாம் தீர்மானஞ் செய்திருக்க, நமது பகைவனாகிய துரியோதனன் இங்கே இரகஸ்யமாய் வந்து சகாதேவனைக் கண்டு, 'தருமராஜனுடைய சிர மற்றுப் போகும்படியான நாள் ஒன்று வைத்துக் கொடு. நான் அந்த நாளில் ஆயுதபூஜை செய்கின்றேன்' என்றான். சகாதேவன் 'அண்ணா! அப்படியே நாள் வைத்துத் தருகிறேன்' என்று உறுதி கூறி அந்த நாளையும் வைத்துக் கொடுத்து விட்டான். இனி நாமென்ன செய்யக்கூடும். சகாதேவன் வைத்துக் கொடுத்த நாளில் துரியோதனன் ஆயுத பூஜை செய்வானானால் அவனுக்குத் தவறாமல் ஜயங் கிடைக்கும்" என்றார்.

இதைக் கேட்டதும் தருமபுத்திரர், "அப்படியா!" என்று கூறிச் சகாதேவனை அழைத்து விசாரித்தார். சகாதேவன், "ஆம்; அப்படிப்பட்ட நாள் வைத்துக் கொடுத்தது உண்மையே. துரியோதனன் அந்த நாள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். நான் எப்படி அதற்கிணங்காம லிருக்க முடியும்! தெரிந்த வித்தையை ஒளிப்பதா? பகைவனா யிருந்தாலும் நம்மை வந்து இரந்தானல்லவா? ஆதலின் உண்மையை மறைக்காமல் கூறினேன்" என்றான்.

இதைக் கேட்டதும் தருமபுத்திரர், ஆநந்தங் கொண்டு, அவனை அருகிலழைத்து, "இது வரையிலும் நீ எனக்குத் தம்பியல்ல. இன்றுதான் எனக்கு நீ தம்பி" என்று கூறி, "சத்திய நெறி தப்பாத அப்பனே! உன் சத்தியமே உன்னைக் காக்கக் கடவது. இனி எனக்கு இவ்வுலகம் வந்தாலும் வராவிட்டாலும், யார் போனாலும் யாரிருந்தாலும், நான் கூறிய சபதம் சரிப்பட்டாலும் தப்பிப் போனாலும், எனக்குப் பெரிதல்ல. உன்னுடைய உண்மை நிலையே போதுமானது. சிறியவனாயினும் பெரிய பொருளைக் கைக்கொண்ட உன்னை நான் புகழ்கிறேன்" என்று உரைத்து, அவனை இறுகத் தழுவிக்கொண்டு முத்தமிட்டுக் கண்ணனை நோக்கி, "காசாம்பூ வண்ணனே! இந்தச் சகாதேவன் உலகமுள்ள வரைக்கும் அழியாப் புகழ் கொண்டான்" என்று வியந்து, "என் தம்பி சகாதேவன் எனக்குச் செய்த சகாயம் மற்றத் தம்பிகளெவரும் செய்யமாட்டார்கள்" என்று புகழ்ந்து மகிழ்ந்தார். "என் தம்பியினுடைய சத்திய நெறி கண்டு நீர் மகிழ வேண்டுமேயொழிய, வருந்த வேண்டுவ தவசிய மன்று" என்றும் சொன்னார்.

இதைக் கேட்டதும் கண்ணன் கலகல வென்று நகைத்து, "'உளவனில்லாமல் ஊரழியுமா?' என்று சொல்வது சரியாயிற்று. இனி நான் பேச வேண்டியதும் செய்ய வேண்டியது மொன்று மில்லை. 'ஏனடா புத்தியில்லாமல் இப்படிச் செய்தாய்' என்று கண்டியாமல், அவனுடைய செய்கையைப் புகழும் உமக்கு நான் எந்த விதத்தில் துணை செய்வது கூடும்?

இதுவரையில் நான்பட்ட பாடெல்லாம் 'விழலுக்கிறைத்த நீர்' போலாயின. 'அதிகாரி வீட்டில் திருடிய பொருளைத் தலையாரி வீட்டில் அடுக்கி வைத்தான்' என்பதுபோல் உம்மிடம் நான் சொல்லிக் கொண்டதற்குப் பயனேற் பட்டது. அக்கரைக்காரருக் கில்லாத காரியம் அயலாருக் கென்ன வந்தது வீரியம்" என்று வெறுத்துப் பேசினர்.

தருமநந்தனர் "எல்லாந் தெரிந்த தமக்கு நான் என்ன சொல்லப் போகிறேன். நடந்ததைப் பற்றி இனிப் பேசுவதில் யாது பயன்? இனி நடக்க வேண்டியதைக் கவனிப்போம். தங்கள் ஆலோசனைப்படியே நடக்கிறேன்" என்றார்.

கிருஷ்ண பகவான் கோபமும் வருத்தமும் தணிந்தவரைப்போல் பாவனை செய்து, "நான் நாள் நியமிக்கிறேன். அன்று நீர் ஆயுத பூஜை நடத்தும். அப்போது நமக்கே ஜய முண்டாகும்" என்று கூறி, சதுர்த்தசி யன்று யாவரும் அமாவாசை யென மயங்கும்படி தந்திரஞ் செய்தார். ஆனபடியால் துரியோதனன் தான் வைத்துக்கொண்டு போன நாளில் ஆயுத பூஜை செய்யாமல் ஏமாந்து போனன். தருமநந்தனருக்கு ஜயமுண்டாகும்படி கிருஷ்ண பகவான் துணை செய்தார்.

பிள்ளைகளே! சகாதேவனுடைய அரிய செய்கையையும், அவனுடைய அச்செய்கையை மெச்சிக் கொண்ட தருமநந்தனருடைய பெருந்தன்மையையும், அப்படிப்பட்ட அரிய குணமுடைய அவர்கட்குக் கிருஷ்ணமூர்த்தியினுடைய கிருபை ஏற்பட்டதையும்

கவனியுங்கள். இதனல் நாம் தெரிந்து கொண்டதென்ன? உண்மையுடையவரும் பெருந்தன்மையுடையவரும் ஒருபோதும் தாழ்ச்சி யடையார் என்பதும், உண்மை யுடையவரே புகழ்ச்சிக் குரியவராவரென்பது மாகையினல் 'உண்மை கடைப் பிடி' என்னும் பெரியார் போதனையை மறவாமலிருக்க வேண்டிய தவசியமாம்.

—:(o):—

வஞ்சனையான பேச்சைப் பேசுவதாகாது

—:(o):—

துரியோதனன் பாண்டவர்களிடம் பொறாமை கொண்டான்; அதன் காரணமாக அவர்களை வஞ்சிக்கத் தீர்மானித்தான்; அதை முடிக்க எண்ணி, அவர்களைத் தன் இருப்பிடம் வரவழைத்து வஞ்சகச் சூதாட்டத்தில் ஈடுபடும்படி செய்தான்.

பின் துரியோதனன் பாண்டவர்களை வஞ்சக வழியிலேயே வெற்றி கொண்டான்; "பன்னிரண்டு வருஷம் கானகவாசமும் ஒரு வருஷகாலம் அக்ஞாத வாசமும் (மறைந்து வசித்தல்) செய்து திரும்பி வாருங்கள். பின் உங்கள் நாடு நகரங்களை உங்களிடமே கொடுத்துவிடுகிறேன்" என்று வாக்களித்தான்.

பதின்மூன்று வருஷ காலத்தையும் கழித்து விட்டுப் பாண்டவர்கள் வரப்போவதில்லை என்று துரியோதனன் நிச்சயித்துவிட்டான். அதனலேயே அவன் அப்படி வஞ்சகமாக வாக்களித்தான்.

கடவுள் கிருபையினல் பாண்டவர்கள் அந்தப் பதின்மூன்று வருஷ காலத்தையும் ஒழித்துவிட்டுச் சுகமாய்த் திரும்பி வந்து துரியோதனனிடம் நாடு கேட்டார்கள். துரியோதனன் வாக்களித்தபடி செய்ய மறுத்தான். உடனே இரு திறத்தாருக்கும் சண்டை மூண்டது. சண்டை முடிவில் பாண்டவர் வெற்றி பெற்றனர்.

வஞ்சகம் பேசேல்

இதன்பொருள்:— வஞ்சகம் = கபடமான வார்த்தைகளை, பேசேல் = நீ பேசாதே.

பண்டித மதன்மோகன் மாளவியாவும் காசி ஹிந்து சர்வ கலாசாலையும்

உலகத்தில் அறிஞர்களும், செல்வ வந்தர்களும் தர்மவான்களும் ஜனங்களின் க்ஷேமத்தின் பொருட்டு அநேக அரிய பெரிய தர்ம கைங்கர்யங் களைச் செய்ய முயலுகின்றனர். அவைகளில் சில ஆரம்பத்திலேயே கடைகால் போடும்போதே தடங் கல் பட்டு நின்று விடுகின்றன. சில பேஸ் மட்டத்திற்கு வந்து நின்று விடுகின்றன. சில நாலாபக்கங்களிலும் சுவர் எடுக்கப்பட்ட வளவில் தடைப்பட்டு விடுகின் றன. சில முழுதும் முற்றுப் பெற்றும் பலன் தரும் சமயத்தில் 'கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லை' என்பதுபோல் இடர்ப்படுகின்றன.

(1) போதிய மூலதனம் தன் கையில் இல்லாமல் காரியத்தைத் துவக்குவதினாலும், (2) பிறர் கைப் பொருளை எதிர்பார்த்து ஒரு காரியத்தை ஆரம்பிப் பதினாலும், (3) ஆரம்பிக்கும்போதிருக்கும் ஆற்றல், உற்சாகம், பிறகு குறைந்து விடுவதாலும், (4) மூல புருஷனின் அகால மரணத்தினாலும், (5) நிச்சய புத்தி, வைராக்கியம் முதலியன இல்லாமல் ஒரு காரி யத்தைத் தொடங்குவதினாலும், (6) சுயநலங் கருதி அதாவது பெரும்புகழ் கருதியோ, பெரிய லாபத்தை உத்தேசித்தோ, பொதுநல அங்கியோடும், தர்ம ஸ்தா

பன போலிப் பக்தியோடும் ஆரம்பிப்பதினாலும், ஆகிய இக்காரணங்களால் தரும ஸ்தாபனங்கள் முற்றும் நிறைவேறாமல் இடர்ப்பட்டழிகின்றன.

இப்படிப்பட்ட இடையூறுகள் ஒரு சிறிதும் இல்லாமல், மண்ணும் விண்ணும் புகழும்படி நீடூழி காலம் நிலைத்துச் செவ்வனே நடைபெறும் தர்ம காரியம் ஒரு சிலவையே யாகும். சுயநலம் கருதாது உத்ஸாகத்துடனும், பேராற்றலுடனும், திடபுத்தியுட னும், தியாக புத்தியுடனும், பணி செய்வதே கடன் என்னும் பெரு நோக்கங்கொண்டு, கடவுளின் திரு வருளை முன்னிட்டு எந்தக் கைங்கரியம் தொடங்கப் படுகிறதோ அந்தக் கைங்கரியமே இனிது முற்றுப் பெற்றுப் பலனைத் தருவதாகும்.

இப்படிப்பட்ட தர்ம கைங்கரியங்களில் தம் முடைய நல மொருசிறிதும் பேணாது, தம் உடல், பொருள் இரண்டையும் உலகமுய்யும் வகையில் உப யோகப் படுத்திக் கொண்டும், மூன்றாவதாகிய தம் ஆவியையும் சமயம் நேர்ந்த காலத்தில் உலகத்தின் க்ஷேமத்தின் பொருட்டு அர்ப்பணம் செய்யத் தயா ராகவிருக்கும் தயாளகுண சீலரும், மகா த்யாகியு மாகிய ஸ்ரீஜத் பண்டித மதன் மோகன் மாளவியா, தம் பெரு முயற்சியினால் ஆரம்பித்த காசி ஹிந்து சர்வ கலாசாலை ஒன்றாகும்.

இச்சர்வ கலாசாலை 1911-ம் ஆண்டில் ஆரம்பிக் கப்பட்டது. இப்போது பலநாட்டாரும் கொண்டாடும் படியாக இதன் கட்டிடம் 1,300 ஏகர் நில விஸ்தீர்ணத் தில் அமைக்கப்பட்டிருக்கிறது. சர்வ கலாசாலை நகர் என்ற பெயரும் வழங்கியுள்ளார் இதற்கு. இதில் 173

கட்டிடங்களும், 20 மைல் நீளமுள்ள ரஸ்தாவும், அந்த ரஸ்தாவில் 2,000 மரங்களும் இருக்கின்றன. 26,00 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இதில் குஸ்தி, டென்னிஸ், ஹாக்கி, கிரிகெட், முதலிய விளையாட்டுகள் விளையாட வசதியும், மாணவர்களுக்குச் சுத்தமான பால் கிடைக்கப் பசுக்களை வளர்க்கத் தோட்டமும் அமைக்கப் பட்டிருக்கின்றன.

'மான்செஸ்டர் கார்டியன்' என்னும் பத்திரிகையில் ஒரு ஆங்கிலேயர் "ஐரோப்பாவிலுள்ள பிரபல சர்வ கலாசாலைகளைப்போல இதையும் செய்ய வேண்டுமென்று கருதி, சில வருஷங்களுக்குள் அவ்வாறே செய்து முடித்துத் தமது முயற்சி முற்றுப்பெற்றது கண்டு, சந்தோஷத்தை அநுபவித்துவரும் பண்டித மதன் மோகன் மாளவியாவைப் போல் சிறப்பு வாய்ந்தவர்கள் உலகத்தில் ஒரு சிலரே யாவார்" என்று மிகவும் வியந்து பேசியுள்ளார்.

விசேஷமாக தர்ம ஸ்தாபனத்தை முன்னின்று துவக்குகிறவர்கள் அவர்கள் காலத்திலேயே அந்த ஸ்தாபனத்தைப் பூர்த்திசெய்து, அது பலன் தரும் இன்பத்தை அநுபவிப்பது கிடையாது. நமது பண்டிட்ஜீ தாம் துவக்கிய பெரிய தர்மத்தைத் தம் வாழ்நாளிலேயே முற்றுப்பெறச் செய்தது மல்லாமல், அதன் பலனைப் பல்லோரும் ஆண்டு அநுபவித்து வாழ்த்தவும், இதர நாட்டாரும் தம்மைக் கொண்டாடும் பெருமையைத் தாம் அநுபவிக்கவும் பாக்கியஞ் செய்தது பாராட்டவும் போற்றவும், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் நாயனார் வாக்கிற் கிலக்காயினர் என்று புகழவும் உரியதாயிருக்கிறது.

இந்தியாவின் வட பாகத்தில் காசி க்ஷேத்திரத்தில் சர்வ கலாசாலை அமைந்துள்ளதுபோலவே, தென் பாகத்திலும் சிதம்பர க்ஷேத்திரத்தில் அண்ணாமலை சர்வ கலாசாலை என்னும் திருநாமத்துடன் ஒரு சர்வ கலாசாலை அமைந்துள்ளது தென்னாட்டார் செய்த பெரும் பாக்கியமாகும். ஈசுவர சிருஷ்டியிலேயே தென்னாட்டில் தர்ம ஸ்தாபனத்திற்காகவே அவதரித்த ஜாதியாரென்று சொல்லும்படியான நாட்டுக்கோட்டை ஜாதியார் மத்தியில் ஒரு திலகம்போல் விளங்கும் தர்ம ஸ்வரூபியாகிய ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களால் இக்கலாசாலை நிருமிக்கப்பட்டுப் பெரும் புகழ்ச்சியுடன் நடந்து வருகிறது இங்கு அவசியம் குறிப்பிடத் தக்கதாகிறது. இச்சர்வ கலாசாலை ஸ்தாபித்திருக்கும் இடத்திற்கு அண்ணாமலை நகர் என்று அழகிய பெயர் அமைந்துள்ளது. இதிலேயும் சகலவித வசதிகளும் அமைந்துள்ளன.

வடக்கே காசி விசுவநாதருடைய அநுக்கிரகத்தால் ஓங்கி வளர்ந்து உன்னத நிலைமையை யடைந்து பலனைத் தரும் காசி ஹிந்து சர்வ கலாசாலையைப் போலவே நமது அண்ணாமலை சர்வ கலாசாலையும் சிதம்பர நடராஜ மூர்த்தியின் அருளினால் வளர்பிறைச் சந்திரன்போல வளர்ந்து, பூர்ண சந்திர ஸ்வரூப மடைந்து, சகல பலனையு மளித்து, உலகமுழுதும் கொண்டாடும் நிலைமையை அடையவேண்டுமென்பது நமது பிரார்த்தனையாகும்.

A. Gopalaratnam Ayyar, Madras.

உலகசுபாவம் அல்லது இரண்டு சிறுமிகள்.

தென்னாட்டிலே, முன்னொரு காலத்திலே இரண்டு சீமான்களிருந்தார்கள். இருவரும் ஒருவர்க்கொருவர் எந்த விஷயத்திலும் ஒத்தவர்களா யிருந்தார்கள். கல்வியிலாவது, கேள்வியிலாவது, வாக்கு வல்லமையிலாவது, குலத்திலாவது, தனத்தி லாவது, இவர்களுக்கு மிஞ்சினவர்கள் அந்த நாட்டில் இல்லவே யில்லை. சகல விவகாரங்களும் இவர்கள் மூலமாகவே சாந்தி யடைந்து வரும். 'இல்லை' என்று வந்தவர்களுக்கு 'உண்டு' என்று ஆதரிக்கும் பெருங் குணம், இவர்களிடம் மற்ற எல்லா நல்ல குணங்களுக் கும் நடு நாயகமாயிருந்து வந்தது. அதனால் "இட் டார் பெரியோர்" என்னும் பழமொழி இவர்களுக்கே சொந்தமாய் விட்டது. நாடெங்கும், நகரெங்கும், ஊரெங்கும், வீடெங்கும் இவர்கள் பேச்சே நிரம்பி யிருந்தது.

இப்படிப் பலர் மெச்ச வாழும் பாக்கியம் பெற்ற இவர்களுக்கு நெடுநாளாக ஒரே யொரு கவலையுண்டு. அது ஒன்றுதான் இவர்கள் மனதைச் செல்லரிப்பது போலரித்து வந்தது. "ஜகதீசா! வாழ்வதும், தாழ் வதும், வருவதும், போவதுமாகிய எல்லாம் உனது திருவருளே யன்றோ! அந்த அருளால் நாங்களடைந் துள்ள செல்வத்திற்கு அளவில்லை. 'எல்லார்க்கும் ஒவ் வொன் றெளிது' என்று உலகஞ் சொல்லும். எங்களுக்கு எல்லாம் எளிதாக முடிந்தாலும் ஒன்று மாத்திரம் அரிதாயிருக்கிறது. அந்த அருமை எங்களை அல்லும் பகலும் அறுபது நாழிகையும் இரம்பம் போட்டறுப் பதுபோல் வருத்தி வருகிறது. "ஈசன் கழலருமை வெவ்வினையிற் காண்மின்" என்பது இப்போது எங்க ளுக்குக் கைகண்ட தொன்றாய் விளங்குகிறது. சகலமான பாக்கியங்களுக்கும் அடியாயிருப்பது உன் திருவடியே யல்லவா?

'திருவடியை நாரணனைக் கேசவனைப் பரஞ்சுடரைத்
திருவடிசேர் வதுகருதிச் செழுங்குருகூர்ச் சடகோபன்
திருவடிமே லுரைத்ததமிழ் ஆயிரத்து ளிவைபத்தும்
திருவடியே யடைவிக்கும் திருவடி சேர்ந்தொன்று மினே'

என்று பெரியார் பணித்திருப்பது எங்களிருதயத்தில் எழுதா எழுத்தாய்ப் படிந்திருக்கிறது. அதுபோல நாங்களும் உன் பொன்னடியை மறவாது புகழடிக்கு ஆளாயிருக்கிறோம். என்றாலும், நாங்கள் பெற்றுள்ள பெருஞ்செல்வம், 'விழலுக்கிறைத்த நீர்'. ஆகாதபடி நீடூழி வாழையடி வாழையாய் நிலைத்துவர, எங்களுக் குப் புத்திர சந்தானத்தை யருள்புரிய வேண்டும். சந் தான அருமை எங்களை வெவ்வினையி லழுத்தி விட்டது. அந்த வெவ்வினையால் உனது 'கழலருமை' யைக் காண நேர்ந்தது. ஏழையர்கள் என்ன செய்வோம். குற்றமற்றவராக வில்லை. அப்படிக் குற்றமற்றவராய் விட்டோமானால் உனக்கும் எங்களுக்கும் உள்ள பேதம் ஒன்றுமில்லாமற் போய்விடும். ஆகையால் அதை விளக்கவந்த நாங்கள் குற்றமுள்ளவரே. குற்ற முள்ளவரென்று குறையைப் போக்காமலிருப்பது

குணப்பெருங் குன்றாகிய உனக்குச் சிறிதும் பொருந்தாது. 'அருள் பழுத்த பழச் சுவையே! கரும்பே! தேனே! ஆரமுதே! என் கண்ணே! அரியபல பொருளனைத்தும் தரும் பொருளே! கருணை நீங்காப் பூரணமாய் நின்ற வொன்றே! புனித வாழ்வே! கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக், காலமுந் தேசமும் வகுத்துக் கருவியாதி விரிவினையுங் கூட்டி, உயிர்த்திரளை ஆட்டும் விழுப்பொருளே! யான் சொலும் விண்ணப்பங்கேளே' என்று வாய்விட்டுச் சொல்லி இருவரும் தனித்தனி சர்வேசுவரனைத் துதித்தார்கள். 'அன்பர்கள் எங்கே' என்று அலைந்து கொண்டிருக்கும் ஆராவமுதன் அவ்விருவருள்ளமுங் குளிரும்படி அவர்களுக்கு ஒவ்வொரு குழந்தையைக் கிருபை செய்தருளினன்.

'ஆனகுடிக்கு ஆண்மகவு வேண்டும்' என்று பூலோகம் புகன்றாலும், சீமான்களிருவரும் தங்களுக்குக் கடவுளருளிய பெண் குழந்தைகளே போதுமென்று ஆனந்த பரவசராய்ப் பகவானை முழுமனதுடன் வாழ்த்தினார்கள்.

இருவரும் தாங்கள் அருமையாய்ப் பெற்றெடுத்த பெண்மக்களிருவருக்கும் முறையே 'நளினாட்சி' 'விசாலாட்சி' என்று நாமகரணஞ் செய்தார்கள்; காலத்திற் செய்யவேண்டிய சுபச் சடங்குகளையும் குறைவறச் செய்து ஆனந்தித்தார்கள்; பிறகு, அக்ஷராப்பியாசஞ் செய்து, கல்வியிலும் தேர்ச்சி பெற வைத்தார்கள். நளினாட்சியும் விசாலாட்சியும் எப்போதும் புஸ்தகமும் கையுமாக விருந்து, ஒழிவு காலங்களில் தங்

கள் நந்தவனத்தில் அமைக்கப் பெற்ற விநோத மண்டபத்தில் உட்கார்ந்து வேடிக்கையான வார்த்தைகளாடிக்கொண்டு வருவார்கள்.

ஒரு நாள் வழக்கம்போல் இப்பெண்மணிகள் தங்கள் நந்தவனத்தில் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது நளினாட்சி விசாலாட்சியை நோக்கி, "அடீ! விசா! நாமும் எத்தனையோ முறை இத்தோட்டத்திற்கு வந்து போகிறோம். ஆனால் இங்குள்ள காட்சிகளைப்பற்றி எப்போதாவது சிந்தித்ததுண்டா? பேருக்கு மாத்திரம் மெட்ரிகுலேஷன் (சர்வ கலாசாலைப் பிரவேச) பரிக்ஷையிற் றேர்ந்து பட்டம் பெற்றோம்.

விசா:— ஆமடி! நளினா! இந்தப் பூஞ்செடியைப் பார். இதில் எத்தனை விதமான நிறங்கள் காணப்படுகின்றன.. இந்த வர்ணங்களை எப்படியடி இப்புஷ்பங்களில் தீட்டினார்கள்? கண்களைப் பறித்துக்கொண்டு போகின்றனவே. காணக்காண என்ன மனோகரமாயிருக்கின்றது. கைதேர்ந்த சித்திரக்காரனும் தான் செய்யும் செயற்கை மலர்களுக்கு இப்படி நிறமேற்றுவானா! ஆச்சரியம்! ஆச்சரியம்!!

நளினா:— உண்மையே; செயற்கை நிறங்களைவிட இயற்கைநிறமே மெத்த அழகாயிருக்கிறது. ஆனால் ஒரு சந்தேகம். இயற்கை யென்றால் சுபாவந்தானே. கர்த்தா இல்லாமல் எப்படி இது தானே இவ்வர்ணங்களைப் பெறக்கூடும்? செடியே முதலில் எப்படி உண்டாகக் கூடும்?

விசா:—மற்ற பொருள்களெல்லாம் எப்படி விநோதமா யுண்டாயிருக்கின்றனவோ அப்படியே இதுவும் உண்டாயிருக்கிறது.

நளினி:—அது எனக்குத் தெரியும். எல்லாவித சிருஷ்டிக்குமே காரண கர்த்தா ஒருவர் இருக்க வேண்டும். ஒவ்வொரு சிருஷ்டியும் அற்புதமாக வல்லவோ காணப்படுகிறது.

விசா:-ஆம்; அந்தக் காரண கர்த்தாதான் கடவுள்.

நளினி:- கடவுளிருந்தால் நமது கண்களுக்குப் புலப்படமாட்டாரா? புலப்படாத காரணத்தால் தான் 'அவர் இல்லை' என்று பலருஞ் சொல்லுகின்றனர்.

விசா:-அப்படியன்று; அவருக்கு ரூபமில்லை. நாமமில்லை; அவருடைய செய்கையைக் கண்டே அவரிருக்கிறார் என்று தெரிந்து கொள்ளுகிறோம். அல்லாமலும் எவரெவர் அவருக்கு என்னென்ன பெயர்களையும் ரூபங்களையும் கொடுத்து வழிபடுகிறார்களோ, அவரவர்களுக்கு அவர் அந்தந்தப் பெயர்களோடும் ரூபங்களோடும் காட்சியளித்துக் காப்பாற்றி வருகிறார். இந்த அற்புத சக்தியவரிடமிருப்பதினாற்றான் அவரை நாம் இலேசில் காண முடியவில்லை. கண்கட்டு வித்தையை நீ பார்க்கவில்லையா? எதிரிலிருக்கும் மனிதன் எதிரிலிருந்து கொண்டே நமது கட்புலனுக்குத் தோன்றாமலிருக்கிறான். எங்கேயோ மறைந்து விட்டானென்று நாம் ஏமாந்து போகிறோம். நம்மைப்போன்ற மனிதனே இந்திரஜாலம், மகேந்திரஜால முதலிய வித்தை

களைக்கொண்டு நம்மை மயக்கும்போது, சர்வ சக்தனான கடவுள் நமக்கு அவ்வளவு சுலபத்தில் காணப்படுவாரா? அதற்கென்று பாடுபட்டால் நாம் விரும்புகிறபடி அவரைக் காணலாம். பின்னும், முதலெழுத்தாகிய 'அகரம்' தனி எழுத்தாயிருந்தும், மற்ற எழுத்துக்களோடு கூடி எவ்வாறு அந்தந்த எழுத்தாகவே காணப்பட்டு வருகிறதோ, அவ்வாறு கடவுள் தனித்தவராயிருந்தும், உயிருள்ளதும் உயிரில்லாததுமான எல்லாப் பொருள்களிடத்தும் உள்ளும் புறமுமாகக் கலந்து அந்தந்தப் பொருளாகவே காணப்பட்டு வருகிறார். ஆகையால் அவரை ரூபமுடையவரென்றும் அரூபி என்றும் சொல்லுகின்றனர்.

"உளன் எனில் உளன்; அவன்
உருவம் இவ்வுருவுகள். } ரூபம்
உளன் அலன் எனில்; அவன்
அருவம் இவ்வருவுகள். } அரூபம்
உளன் என, இலன் என , இவை
குணம் உடைமையின்
உளன் இருதகைமை யோடு
ஒழிவிலன் பரந்தே". சடகோபர்

என்னும் வேத வாக்கை நாம் கவனித்தால், நமது சந்தேகம் நீங்கலாம். இது என்ன சொல்லுகிறது? கடவுள் இருக்கிறானென்றால், அவன் எல்லாப் பொருள்களோடும் முன் சொன்னபடி கலந்திருப்பதால், நாம் பார்க்கின்ற எல்லா ரூப வஸ்துக்களும் 'அவனே' என்று தெரிந்து கொள்ளவேண்டும். 'இல்லை' என்றாலோ அருவமும் அவனுடைய சொரூப மாகையால் எல்லா அரு

யப் பொருளும் (காற்று முதலியவை) 'அவனே' என்று அறிந்து கொள்ளவேண்டும்.

'உண்டு' 'இல்லை' என்னும் பதங்கள் குணத்தின் தன்மையைக் காட்டுவதால், அக்குணத்தை ஏற்கும் குணி (கர்த்தா)யை நாம் எப்படி 'இல்லை' என்று சொல்லலாம்?

நளினு:-அப்படியா? இப்போது நன்ருய்த் தெரிகிறது.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு தத்துவ சாஸ்திரி இவர்களுடைய பெற்ருேரைக் காண வந்தார். வந்தவர் இவர்கள் கடவுள் விஷயமாக மிகவும் கனிகரமாய் வார்த்தை யாடுவதைக் கண்டு அதிசயித்து, அவர்களிடம் வந்து, "குழந்தைகளே! நீங்கள் கடவுளைக் கையுமெய்யுமாகக் கண்டு விட்டது போல் இப்படிப் பேசுகின்றீர்களே. நீங்கள் கடவுளைப் பார்த்தீர்களா? அப்ப்டி என்ன தான் நீங்கள் வாசித்து விட்டது. நான் படித்த புஸ்தகங்கள் அலமாரிஅலமாரியாக அடுக்கப்பட்டும் மிகுந்து கிடக்கின்றன. பி. ஏ., முதல் ஆங்கில பாஷையிலுள்ள மற்ற எழுத்துகளெல்லாம் எனது பட்டத்திற் சேரும்படி ஒன்றையும் விடாமல் முற்றுங் கற்றேன். எந்தப் புஸ்தகத்தாலும் 'கடவுள் உண்டு' என்பதை ரூபிக்க முடியவில்லை. ஆகையால் 'கடவுள்' என்னும் பதம் அர்த்தமில்லாத தொன்றென்று என்னைப்போன்ற கரை கடந்த கல்வியாளரால் கைவிடப்பட்டது. அந்தப் பிரயோசனமற்ற பதத்துக்கு நீங்கள் கைகால் ஏற்படுத்தி உங்கள் குரலையும் பாழாக்கிக் கொள்ளுகிறீர்கள். நீங்களேன் இதில்

தலையிட்டுக்கொண்டு வீணே பொழுது போக்குகிறீர்கள்? எழுந்திருங்கள். உங்கள் அப்பா எங்கே!" என்று கேட்டார்.

இப்பேச்சைக் கேட்டதும், பெண்களிருவரும் திகைப்பூண்டு மிதித்தவர்கள்போ லயர்ந்து விட்டனர். பிறகு ஒருவாறு தேறி, தத்துவ சாஸ்திரியை நோக்கி,

விசா:—ஐயா! நீர் கடவுள் 'இல்லை' என்ருு சொல்லுகிறீர்?

இதற்குள் நளினுட்சி விசாலைக் கையமர்த்தி, சாஸ்திரியைப் பார்த்து,

நளினு:—ஐயா! நீரோ சகலமும் அறிந்தவரென்று சொல்லுகிறீர். நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்குப் பதிலளிக்க வேண்டும். அதாவது இதோ இருக்கிற மரம் எப்படி யுண்டாயிற்று?

சாஸ்திரி:—அ! அ! ஆ! (என்று நகைத்து) இவ்வளவு தானு? இது தெரியாதா உனக்கு? பேஷ்; வித்திலிருந்து விருக்ஷம் வந்தது. இது ஒரு பிரதாபமா?

நளினு:—வித்து எங்கிருந்து வந்தது?

சாஸ்:—விருக்ஷத்திலிருந்து.

நளினு:—எது முந்தியது?

சாஸ்:- எதுவா? இரு - இரு - சொல்லுகிறேன். (என்று யோசனையில் ஆழ்ந்து விட்டார்) இதற்குள்

விசா:- ஐயா! அது கிடக்கட்டும். அது பெரிய சங்கதி. நீர் புசிக்கும்படியான முட்டை எங்கிருந்து வந்தது?

சாஸ்:- கோழியிலிருந்து. இது கூடத் தெரியாதா?

(வரும்)

ஜால சம்பத்து

(முன் 86-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்த வாலிபன் மரத்துண்டொன்றைப் பற்றிக்கொண்டு மிதந்துகொண்டே ஒரு தீவுக்குப் போய்ச் சேர்ந்தான். அத்தீவிலிறங்கி, நகரத்திற்குள்ளே செல்லுகையில் அதிர்ஷ்ட வசத்தால் காட்டுப் பன்றி ஒன்று உறங்குவதையும், அதின் எதிரே மாணிக்கக் கல் ஒன்று இருப்பதையுங் கண்டான். அவ்வளவிலே அவன் மெல்ல நடந்து அம் மாணிக்கக் கல்லை யெடுத்தான். எடுத்த மறு நிமிஷத்தில் ஆகாயத்திற் கிளம்பினான். அவன் நாவல் மரத்தின் உச்சியிற் போய் உட்கார்ந்து கொண்டு காட்டுப் பன்றியைக் கொல்ல மரத்திலிருந்து கிளைகளை ஒடித்து அதன் மீது போட்டான். பன்றி துயிலொழிந்து மாணிக்கம் இல்லாததைக் கண்டது. உடனே வெகு கோபத்துடன் மரத்தின் மீதுள்ள வாலிபனைக் கொல்லக் கருதி வேகத்துடன் மரத்தின்மீது மோதிக் கொண்டதால் தலையில் அடிபட்டு மாண்டது. வாலிபன் அப்பன்றி இறந்ததைக் கண்டு, சந்தோஷத்துடன் கீழே யிறங்கி அதன் இறைச்சியைச் சுட்டுப் பாகம் பண்ணி உண்டான். பிறகு, அம் மாணிக்கக் கல்லை எடுத்துக் கொண்டு ஆகாய மார்க்கமாய் இமயமலைச் சாரலில் சென்று இறங்கினான்.

இமயமலைச் சாரலில் தபசிகளின் பர்ணசாலைகள் இருப்பதைக் கண்டு கீழே யிறங்கி, முதல் சந்நியாசியின் குடிசைக்குட் பிரவேசித்தான். சந்நியாசியும் அவனை உபசரித்து, இரண்டு மூன்று தினங்கள் வரை இருக்கச் செய்தார். அங்கு தங்கின அந்த இரண்டு மூன்று தினங்களில், அக்கோடரியின் மகத்துவத்தைக் கண்டு, அதைப் பெற அவன் நிச்சயித்துத் தன்னிடமிருந்த மாணிக்கக் கல்லின் சக்தியைக் கூறிக் கோடரி கொடுப்பதாயிருந்தால் மாணிக்கக் கல்லைக் கொடுப்பதாகச் சொன்னான். அந்தச் சந்நியாசியும் ஆகாய மார்க்கமாகக் கிளம்பிச் செல்ல ஆசை கொண்டு, அவனுடைய வார்த்தைக் கிணங்கிக் கோடரியைக் கொடுத்து மாணிக்கக் கல்லைப் பெற்றுக் கொண்டார். அந்த வாலிபன் கோடரியைப் பெற்றுக்கொண்டு பத்தடி தூரஞ் சென்றதும், கோடரியைத் தட்டி "உடனே நீ சென்று அந்தச் சந்நியாசியின் தலையைப் பிளந்து மாணிக்கக் கலலைக் கொண்டுவந்து என்னிடம் கொடு" என்றான். அக்கோடரி பறந்துபோய் அடுத்த நிமிஷத்தில் சந்நியாசியின் தலையைப் பிளந்து மாணிக்கத்தைக் கொண்டுவந்து கொடுத்தது. பிறகு அந்த வாலிபன் இரண்டாவது சந்நியாசியின் பர்ணசாலைக்குச் சென்றான். அங்கும் இரண்டு மூன்று நாள் தங்கி மத்தளத்தின் மகிமையைக் கண்டான். சந்நியாசியிடமிருந்த மத்தளத்தைத் தன்னிடமிருந்த மாணிக்கத்திற்கு மாற்றிக்கொண்டு அதை விட்டு நீங்கினான். பர்ணசாலையை விட்டுப் பத்தடி சென்றதும், கோடரியை விட்டு அந்தச் சந்நியாசியின் தலையைப் பிளந்து மாணிக்-

கத்தைக் கொண்டுவரச் செய்தான். கடைசியாக, மூன்றாவது சந்நியாசியிட மிருந்து பாற்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டு ஆகாய மார்க்கமாய்க் காசி நகருக்குப் பக்கத்திலுள்ள கிராமம் ஒன்றில் வந்திறங்கினான். அந்த வாலிபன் உடனே ராஜ்ஜியத்தைத் தன்னிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றும், இல்லாவிடில் யுத்தத்திற்குத் தயாராக விருக்க வேண்டுமென்றும், காசி ராஜனுக்குக் கடித மெழுதி ஒரு ஆளிடம் கொடுத்தனுப்பினான். காசிராஜன் அத் துஷ்டனைப் பிடித்துத் தண்டிக்கக் கட்டளை யிட்டான். அவன் மத்தளத்தைத் தன் இடது கரத்தால் அடித்தான். உடனே சதுரங்க சேனை உண்டாயிற்று. அந்தச் சேனையைக் கொண்டு காசி ராஜனுடன் யுத்தத்திற்குப் புறப்பட்டான். யுத்தரங்கத்தில் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில், அவ்வாலிபன் பாற்கிண்ணத்தைக் கவிழ்த்துத் தயிர்ப் பிரவாகம் உண்டாகச் செய்தான். அந்த தயிர்ப் பிரவாகத்தால் காசிராஜன் வீரர்கள் பலர் இறந்தனர். மீண்டும், அவன் கோடரியைத் தட்டி அரசனுடைய தலையைப் பிளந்தான். சத்துருக்கள் மாண்ட பிறகு, அவ்வாலிபன் தன் பரிவாரங்களுடன் காசிநகர் சென்று ததிவாகனன் என்னும் பெயருடன் சிம்மாசன மேறினான்.

இவ்வாறு ததிவாகனன் ராஜ்யம் பெற்றுப் பரிபாலனஞ் செய்துவருகையில், ஒரு நாள் கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு மீன் வலை வீசினான். அப்பொழுது அவ்வலையில் அழகான நல்ல மாங்கனி ஒன்று அகப்பட்டது. அதைஎடுத்துக்கொண்டு அரண்மனை சென்று புசித்தான். அக்கனி மிகவும் இனிமையாகவும் வாசனையாகவு மிருந்ததால், அக்கனியை உண்ட பிறகு, கொட்டையைப் பத்திரமாய்த் தன் தோட்டத்தில் நடும்படி அவன் உத்தரவு செய்தான். அம் மாங்கொட்டையை நட்டு அதற்கு வெகு பத்திரமாக நல்ல எருக்களிட்டுப் பாலூற்றி நல்ல வாசனை நீர் பாய்ச்சி வளர்த்து வந்ததால், அது நாளடைவில் மரமாகி நல்ல அழகான பழங்களைக் கொடுத்தது. பழம் நல்ல நறுமணத்துடன் வெகு இனிப்பாயிருந்தது. ததிவாகனன் அப் பழங்களைப் பல அரசர்களுக்கும் அனுப்ப எண்ணினான். பழங்களைப் பறித்து அதன் முளை கிளம்புமிடத்தில் ஊசியால் குத்தி விட்டுப் பிறகு பழங்களை அரசர்களுக்கு அனுப்பி வந்தான். அப் பழங்களின் கொட்டைகளை நட்டால் மரமுண்டாகாமலிருக்குமாறு ததிவாகனன் அந்த யுக்தி செய்தான். அரசர்கள் அப் பழத்தைத் தின்று அதன் ருசியைக் கண்டு அக்கொட்டையை நட ஆரம்பித்தார்கள். கொட்டையில் ஊசிக் குத்து பட்டிருந்ததால், அது முளைக்கவில்லை. அதை உணர்ந்த ஓர் அரசன் பொறாமை கொண்டு, ததிவாகனன் தோட்டத்திலுள்ள மாங்கனிக்குக் கசப்பு உண்டாகும்படி செய்து வைக்கத் தன் தோட்ட மாலியை ரகசியமாக அனுப்பினான். அத்தோட்ட மாலி காசி நகர் வந்து ததிவாகனனைக் கண்டான். ததிவாகனன் அவனுக்குத் தோட்ட வேலை கொடுத்துத் தன் மாலியின் கீழ் வேலை செய்யுமாறு அமர்த்தினான். புதிய மாலி முதலில் சில நாள் வெகு சிரமப்பட்டுப் புதிய புதிய மரங்களை

வைத்துத் தோட்டங்களைத் திருத்தி அரசனை மகிழ வைத்தான். அரசன் புதிய மாலியின் வேலைக் குகந்து பழைய மாலியை நீக்கிவிட்டுப் புதிய ஆளை நிலையாக அமர்த்தினன். புதிய மாலி தனது அரசனுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்யக் கருதி, மாமரத்தைச் சுற்றி வேம்பு முதலிய கசப்பு மரங்களின் வேர்களைப் புதைத்து மாமரத்தின் வேரில் படரும்படி செய்தான். நாளடைவில் புதிய வேர்களின் சம்பந்தத்தால மாமரத்தின் வேரில் அவைகளின் கசப்பு நீர் ஊறிற்று. கசப்பு நீர் வேரிலே ஏறியதால் மாமரமுழுதும் கசப்பு உண்டாயிற்று. மாங்கனிகளும் கசப்பாகவே யிருந்தன. ஒரு நாள் அரசன் மாங்கனியைப் புசிக்க, அது எட்டிக் கசப்பாக இருந்தது. உடனே அதன் காரணத்தை அறியுமாறு, ததிவாகனன் 'தன்னிடமிருந்த போதி சத்துவரை வரவழைத்துக் கேட்டான். போதிசத்துவர் அம் மரத்தைச் சுற்றிலும் கைப்பு மரங்களின் வேர்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்றார். அம்மரத்தைச் சுற்றிலுமுள்ள கைப்பு வேர்களைக் களைந்து, மறுபடியும் அதற்கு நல்ல எருக்களிட்டுப் பாலூற்றி வாசனை நீர்ப் பாய்ச்சிப் பழைய இனிமையான ருசியை உண்டாக்கினர். புதிய தோட்ட மாலி செய்கையாலுண்டான கேட்டை அறிந்த அரசன், அவனை நீக்கிவிட்டுப் பழைய தோட்டக்காரனையே அமர்த்தினன். போதிசத்துவர் சகவாச தோஷத்தினல் ஏற்படும் தீமையைப்பற்றி அரசனுக்கு உபதேசம் செய்து நல்ல தர்மங்களைக் கூறிக் கடைசியாக மகா நிர்வாண நிலைபெற்று மறு ஜென்மம் எடுத்தார்.

(லோகோபகாரி)

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 210784

சாந்தசீலர்.

—:(o):—

(முன் 71-ம் பக்கத் தொடர்ச்சி)

அற்பபுத்தியின் பயமுறுத்தலின் பொருட்டு ""உண்ட வீட்டிற் கிரண்டகம் நினைத்த, பாதகனுயினேன், கோமானே! குணக்குன்றே! அனைவோர்க்கும் தெய்வமாக விளங்கும் இலைமுகப் பைம்பூணினையாம் கொற்றவனே! நற்றவனே! தங்கள் சகோதரராகிய இளங்கோன் தங்களைக் கொன்றுவிட்டு, இந்நிலவுலகை ஆள நினைவுகொண்டு. அதன் நிமித்தம் என்னைத் தனக்குக் கருவியாக உபயோகிக்கக் கருதி, என்னையணுகி நயமொழிகளால் தீர்த்தப் பிரசாதத்தில் விடத்தைக் கலந்து தங்கட் கூட்டிக் கொன்று விடுமாறு வற்புறுத்தினர். நான் என்னல் ஆனமட்டும் அவர் உரையை மறுத்து நற்புத்தி போதிக்க முயன்றேன். ஆனல் அவை 'செவிடன் காதில் ஊதின சங்காதம், போன்று பயன் படாமற் போயின,—

'கற்பாறை மீது கடுமழைதான் பெய்தாலும்
அற்பமது மாங்கதனு ளார்ந்திடுமோ-கற்றறியா
மூர்க்கருக்குப் புத்திமதி முன்னூறு சொன்னலும்
ஏற்பரோ வேலாரேன் றேண்.'

(அறநெறி வெண்பா)

என்பது உண்மை யுரையே யன்றோ? அதன்மேல் அவர் என்னை உறுக்கி நோக்கி, "நான் சொன்னபடி

செய்தாலாயிற்று; இல்லையேல் உன்னை கண்டங் கண்டமாய் வெட்டிப் பொருனை யாற்றில் போட்டு விடுமாறு செய்வேன்; ஜாக்கிரதை! நான் சொல்லும் வண்ணம் செய்வாயே யாயின், பெருநிதி தந்து உன்னை உன்னத ஸ்தானத்தில் வைத்துப் பேணுவேன்" என்று கூறி என்னை மிகவும் அச்சுறுத்தினார். அறிவிலியாகிய நானும் என் மடமைக் குணத்தினாலும் அச்சுறுத்தலினாலும் பீடிக்கப்பட்டுச் செய். காரியம் இன்னதெனத் தேறாது சம்மதித்தேன், ஆண்டகையே! தங்கள் சகோதரரின் தீய நியமனப்படி படு விஷங் கலந்த நீரே தங்களுடைய இந்தச் செங்கரத்தில் தங்கி இருப்பதாகும். அருளாளரே! செம்மனச் செல்வரே! ஏழைமீது இரக்கங்கொண்டு அப்புன்னீரைச் சீக்கிரம் கீழே சிதறி விடுங்கள். அத் தீய நீர் இத்தனை நேரம் வரை தங்கள் மெல்லிய கரத்திற் றங்குவதற்குத் தகுதியான தன்று" என்று பதறிக் கதறி அருவி போல் கண்ணீர் பொதிந்த வண்ணம் இருப்ப, மன்னன் அடிமிசை முடிபட வீழ்ந்து, பலமுறை வணங்கி பன்னிப் பன்னி கூறுவானானான்.

அந்தணன் கூறிய தனைத்தையும் அமைதியுடன் கேட்டு வந்த அரசர், பெருந்தகை முடிவில தன் முகத்தினிடமாகப் புதியதோர் புன்னகை பூத்து, பிராமணரைக் கடாக்ஷித்து நோக்கி, "பிராமணோத்தமரே! வீணே மனம் வருந்த வேண்டாம். என் இளவல் இந்த அரசைத் தானாள எண்ணங் கொண்டுள்ளான் என்பதை எனக்குச் சிறிது தெரியப்படுத்தி யிருப்பானாயின், அக்கணமே இவ்வரசை அவன்பால் ஒப்ப

டைத் திருப்பேன். நான் எவ்விதம் இதை ஆளுவதற்கு உரிமை யுள்ளவனோ, அவ்விதமே அவனும் இதை ஆட்சி புரிய உரிமை யுடைவனன்றோ? நான் இத்தனை நாள் ஆண்டு அனுபவித்ததே போன்று, அவனும் ஆண்டு அனுபவிக்கக் கருதுவது சகஜந் தானே? இதை உணராம லிருந்தது என்னுடைய பிழையே யன்றோ! ஆதலின் அவன் எண்ணியது சரியே" என்று கூறிய வண்ணம் அந்த விஷ நீரை அருந்தப் போயினர்.

அதனைக் கண்ட பிராமணன் பதை பதைத்து, நெஞ்சு உலர்ந்து, தடுமாறிக் குழறிக் கொண்டு, "ஐயனே! அது விஷபான மாயிற்றே. கீழே ஊற்றி விடுங்கள் என்று பல தடவைகள் கேட்டுக் கொண்டேனே. மறந்து போயினீர்கள் போலும்! தங்களிச்சைப்படி இவ்வரசைத் தங்கள் அருமைத் தம்பிக்கே அபிஷேகம் செய்து வையுங்கள். அதைப்பற்றி ஏழையேன் ஏதும் கூறத் தகுதி யுடையவனல்லன். நான் வேண்டுவதெல்லாம் கூடி இதுவே. கெட்ட விஷ நீரை சட்டென எட்டக் கீழே கொட்டிவிடுங்கள். என் துரையே! உடனே அதைச் செய்யுங்கள். ஊற்றி விடுங்கள் கீழே; ஊற்றி விடுங்கள் கீழே. வேறு நல்ல சுவாமி தீர்த்தம் வார்க்கிறேன்" என்று பணிந்து மேன்மேலும் இரந்து வேண்டிக் கொண்டனன். அரசர் அந்தணனைக் கருணையுடன் நோக்கி, "ஐயரே! நீர் ஒன்றுக்கும் வருந்தாதீர். 'அவனன்றி ஓரணுவும் அசையா' தென்பதைத் தாங்கள் அறியீரோ? இந் நீரை விஷ நீரென்று கீழே ஊற்றிவிடும்படி கூறுகின்

றார். இது ஆண்டவனுடைய தீர்த்தப் பிரசாதமாகிய திவ்யாமிர்த மன்றோ? இத்தகைய மேன்மை வாய்ந்த தீர்த்தத்தைத் தரையில் வீணே ஊற்றி, மீளா நரகிற் காளாகுவதா? சுவாமி பிரசாதத்தை வீணாகக் கீழே சிந்த மாட்டேன் என்பதைத் தாங்கள் அறியீரோ? அதனால் ஆவதாகுக" எனக்கூறி, "முருகா" என அந்நீரை உட்கொண்டு சட்டென எழுந்து, வேறு வார்த்தையாடாமல் பொட்டென வெளியிற் சென்றார்.

அர்ச்சகப் பிராமணர் அப்படியே திகைத்து மரம்போல் சில நிமிஷம் அசைவற்று நின்றிருந்தார். பின் தன் விதியை நொந்து கொண்டு கலவர மிகுந்த மனமுடையவராய் அவ்விடத்தை விட்டகன்றார்.

நடந்த யாவையும் இமை கொட்டாது மறைவிடமிருந்து அற்பபுத்தி கவனித்துக் கொண்டிருந்தானன்றோ? தன் தமையன் முகாரவிந்தத்தை நேரில் கண்டவுடனேயே, அவனுடைய மனசெல்லா மகன்றது. அவனையு மறியாமல, அவன் மனத் திடமாகத் தமையன் மீது அன்பு பொங்கித் ததும்பிப் பெருகி ஓடிற்று. 'தானாடா விடினும் தன் தசை யாடும்' என்பது உண்மை யுரையே யன்றோ? பிராமணன் உள்ளபடி உண்மையை உரைத்ததற்குத் தன் தமையன் கூறிய மறு மொழியைக் கேட்டதும், அவன் மனம் நீராகக் கரைந்து ஓடிற்று. "ஐயோ! இப்படிப்பட்ட தருமப் பிரபுவுக்கும் கேடு நினைத்தேனே! நன்றி கொன்ற பாதகனானேனே! ராஜத் துரோகியும், பிராத்ருத் துரோகியு மானவர்கள் ஒருவர் உண்டோ இவ்வுலகில்? யாவரும் அடைதற்கரிய தெய்வமே போன்ற

அருமைத் தமையனை யடையப் பெற்றும், அவர் தன்மையை ஓராமற் போயினேனே! யான் செய்த வஞ்சகங்கள் முற்றும் கேள்வியுற்றும் ஒரு வார்த்தையேனும் என்னைக் கடிந்து சொன்னாரில்லையே! ஆ! என்ன பெருந்தன்மை! என்ன தயாள குணம்! என்ன கண்ணோட்டம்! என்ன அன்பு! என்ன அறிவு! என்ன பக்தி! இத்தகைய அரும் பெரும் வள்ளலுக்குங் கேடு சூழ்ந்து விட்டேனே! அந்தோ! அந்தோ!! கொடியேன்! கடையேன்!! என்ன செய்தால் தீரும் என் புன் ஜென்மத்தை? யாவும் தெரிந்தும் விஷ நீரைப் பானம் செய்து விட்டாரே! இனி என்ன ஆகுமோ? எவ்வாறு முடியுமோ? என் முன்னோன் உயிர்தரித்திருக்கக் காண்பேனோ? அவர் அன்பொழுகத் தமது அருமைத் திருவாயினால், 'தம்பி!' என்று அழைக்கும் பாக்கியத்தைப் பெறுவேனோ? என்ன செய்வேன்! எவ்வாறு உய்வேன்! அவர் அருந்தும் தருணத்தில் பொருக்கெனச் சென்று, அந்நீரை அருந்தா வண்ணம் தடுக்காமற் போனேனே! என் பாழ் மதியை என்னவென்று நொந்து கொள்வேன்" எனப் பலவாறு புலம்பித் தவித்துக்கொண்டு முடிவில் அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்றான்.

அரசர் தேவாலயத்தை விட்டு அகன்று சென்றதும், எப்பொழுதும் போல் தம்முடைய வேலைகளை முறையே கவனித்துக்கொண்டு சென்றார். ஒரு மணி ஆயிற்று; இரண்டு மணி ஆயிற்று; மூன்று மணியும் ஆயிற்று; அந்த நாளெல்லாம் அகன்றது. மறு நாளும் சென்றது. வியப்பு! வியப்பு!! பெரு வியப்பு!!! அந்த

விடத்தினால் அரசர் பெருந்தகைக்கு எவ்வித இடுக்கணும் உண்டாகவே இல்லை!!! அந்த விஷம் அவரை யாதும் ஊறு செய்யா தொழிந்தது! தெய்வத்தை உறுதியாக நம்பினவர்களுக்கு உண்டாகுமோ தீங்கேதும்? அப்பெருமானின் பக்தியின் பெருக்கை எங்ஙனம் எடுத்தியம்புவது! என்ன உறுதி!! என்ன நம்பிக்கை!!! என்ன தெய்வத் தன்மை வாய்ந்த அரசரிவர்!

அவ்வூரார் அனைவரும் இரண்டொரு தினங்களில் இவ் விஷயங்களை யெல்லா மறிந்தனர். பேராச்சரியம் எய்தினர். அரசனைத் தெய்வத்தின் திரு அவதாரமாக எண்ணிப் போற்றினர். முன்னிலும் பல்லாயிரமடங்கு அரசர் ஜனங்களின் பிரீதிக்குப் பாத்திரராயினர்.

இளவரசனை எல்லோரும் விஷம்போல் கடிந்து ஒதுக்கினர்; அவன் முகத்திலும் விழிப்பது பாபம் என்று அஞ்சி அகன்றனர். அவனை ராக்கதன் என்றும், ராஜத் துரோகி என்றும், நயவஞ்சகனென்றும், கொலைபாதகன் என்றும், இழித்துரையாதாரில்லை. "தருமதேவதைக்குத் தீங்கிழைக்க எண்ணிய இவன் நாசமடைதல் வேண்டும்" என்று வாய்கொண்ட மட்டும் வைது சபித்தனர். பல தேவாலயங்களிலும் பெரிய அரசன் நீடூழி காலம் வாழ வேண்டி அர்ச்சனை அபிஷேகங்களைச் செய்து வைத்து விழாக் கொண்டாடினார்கள்.

இச்சம்பவங்கள் நடந்த ஆறும் நாட்காலையில், அரசன் தெய்வ சந்நிதானத்தில் வழக்கம் போல்

தீர்த்தப் பிரசாதம் கொண்டு எழுந்திருக்கும் தருணம், தன் அறியாமையினாலும், துற்போதனையினாலும், தமையனுக்குச் செய்த துரோகச் செயலை நினைந்து நினைந்து, நெஞ்சம் புண்ணாகி, உடல் மெலிந்து, அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய் இருந்த இளவரசன், அரசன் திருவடியில் வெட்டுண்ட பனை மரமே போல் நெடுஞ்சாண் கடையாய் விழுந்து தன் கண்ணின் நீர் வார்த்து, அவர் தம் கால் கழுவா நின்று, விம்மி விம்மி அழுது, "அண்ணா! அண்ணா!! தர்ம பூபதியாகிய தமக்கு, மலத்தினிடையே புழுத்த சிறு புழுக்களிலும் கடையனாகிய நான், பொறுத்தற்கரிய பெரிய குற்றம் புரிந்தவனானேன். 'சிறியோர் பெரும்பிழை செய்தனராயின், பெரியோர் அப்பிழை பொறுத்துதலும் அரிதே! ஆகவே நன்றி கொன்ற பாதகனாகிய நான் இனி ஒரு கணமும் இவ்வுலகிடை இருத்தற்குத் தகுதியுடையவனல்லன்; ஆதலால் தேவரீர் தங்கள் திருக்கரத்தினால் அடியேனை என் பாபம் தீர வெட்டி விட வேண்டுகிறேன்" என்று சொல்லித் தன் உடைவாளை உருவி அவருக்கு நேராக நீட்டிக் கொண்டு சிரங் குனிந்த வண்ணம் நின்றான்.

அரசன் தன் இளையவனின் செயல் கண்டு மிகவும் மனம் கரைந்து, உருகி அவனை மார்புடன் இருகக் கட்டித் தழுவி முத்தமிட்டு, "என் அருமைத் தம்பீ! நீ இவ்வாறு கூறத் தகுமோ? என்னிடத்தில் நீ வைத்திருந்த அன்பை யான் அறியேனா? ஏதோ கால வேறுபாட்டினாலும், துஷ்டர்களினது கூட்டுறவாலும் நீ இவ்வாறு செய்தனையேயன்றி வேறென்ன? இது

ஒரு குற்றமாமோ ? மேலும் தன் குற்றம் உணர்ந்து மனம் கரைந்தோர், அக் குற்றத்தி னின்றும் நீங்கியோராவர். பாத்திரங்களின் அழுக்கை மண்ணீர் வார்த்துக் கழுவுதல்போல, நீயும் உன் மன வழுக்கைக் கண்ணீர் வார்த்துக் கழுவினை யாதலின், குற்றந் தீர்ந்தனை. தூய்மை யுற்றனை. மானிடராகப் பிறந்தோர் யாவரும் பிழை செய்த லியற்கை. தன் குற்றத்தை யுணர்ந்து வருந்தும் ஒருவனே மேலோ னவன். அவ்வாறு மேலோனை அரிய தம்பி எனக்குக் கிடைக்கப் பெற்றேனே! என் பாக்கியமே பாக்கியம் ! எவர்க்குண்டு இந்தச் சிலாக்கியம்? சென்றது குறித்து எண்ணி எண்ணி மனங் கன்றுவது நன்றன்று; யாவும் ஈசன் திருவருளால் நன்மை யாகவே முடிந்தது. ஆதலின் அவர் இன்னருளை வாழ்த்தி, மேன் மேலும் நன்னெறியில் நடக்க முயலுவோமாக'' எனக் கூறித் தேற்றினர்.

அன்று முதல் அற்பபுத்தி, துர்ச்சனர் சகவாசத்தி னின்றும் விலகி, மன இருள் விடிந்து, தீ நெறி கடிந்து, நன்னெறி படிந்து, நற் புத்தியாய் அரசர் சொற்படி நடந்து, அவருடன் மன மொத்து நெடுங் காலம் இனிது வாழ்ந்திருந்தான். சாந்தசீல மகாராஜரும் கடவுளின் கருணையை வியந்து, மனம் நெகிழ்ந்து, வாயாரப் புகழ்ந்து, அகமிக மகிழ்ந்து, மிகத் தழைந்து, சத்தியமும், தருமமும், நாகரிகமும், தெய்வ பக்தியும் மேன்மேலும் வளர்ந்தோங்க வெகு காலம் ஆட்சி புரிந்து கொண்டு சுகமாக வாழ்ந்து வந்தார்.

நண்பர்களே ! விஷமுண்டவர் மரிக்காம லிருப்பாரோ வெனில், மந்திரத்தாலும், மனோவசியத்தில் வல்லவர், "விஷ மிறங்கி விட்டது! நீ பிழைத்து விட்டாய்'' என்று சொல்லும் மன மொன்று பட்ட உறுதியான சொற்களினாலும், விஷம் தீண்டப் பெற்றவன், அது நீங்கிச் சுகமாகப் பிழைத் தெழுதலைக் காண்கின்றோ மன்றோ? மனத்தின் சக்தி அபரிமிதமானது. சன்மார்க்கத்தில் நடப்பதினாலும், ஈசுவர பக்தியினாலும் மன ஓர்மை ஏற்படுவதினால் அச் சக்திகள் வளர்ந் தோங்குகின்றன. அதனால் பல சித்திகளு முண்டாகின்றன. இங்ஙனம் நன்மார்க்கத்தில் நடந்து, மனத்திண்மை வாய்க்கப் பெற்றதாலே மதஸ்தாபகர்க ளெல்லோரும், பல அற்புதங்களைச் செய்ய வல்லவ ராயினர். ஆகவே விஷமுண்ட சாந்தசீல மன்னர் ஊறுபடா திருந்தது சம்பவியாமை யன்று.

இக் கதையினால், 'நாகரிக மென்று நவில்வது யாது ?' என்பது நிச்சயத் தறியக் கிடக்கின்றது. உண்மையைக் கூறப் புகுமிடத்து சாந்தசீல மகாராஜரே சரியான நாகரிகத்தைத் தெரிந்து கையாண்ட சதுர ராவர். நாகரிக மென்பது வெளிப்பகட் டன்று; டாம்பிக மன்று. புதிய சாதனங்களைக் கைக்கொண்டு தன்னயம் தேடி ஏழைகளை அருளின்றி வருத்தி வாட்டும வன்மை யன்று. போலிக் கல்வி கற்று உள்ளொன்றும் வெளி யொன்று மாகப் பொருள் பல படப் பேசும் சித்திரமன்று; அடிமைப் பிழைப்பில் ஆசை கொண்டு செல்லும் ஆண்மைக் குறைவுமன்று. மற்றென்னை யெனின்: அது மனோ வாக்குக் காயங்

களிற் றூய்மை யுற்று, அன்பையும், அருளையுங் கைக்கொண்டு உயரிய வழிகளி லுழைத்துப் பொருள் தேடித் தெய்வ பக்தியும், சாந்தமும் பொலிந்து தன்னிடத்துப் பிழை செய்தோரைக் கண்ணோட்டத்துடன் (தாட்சணியத்துடன்) மன்னித்து மற்றெவ்விடத்தும் நடுவு நிலைமையுடன் பொருந்தி நன்னெறியில் நின்றலே யாம்.

நாகரிக மென்பதற்கு இவ்விதமே நம்முன்னோர் பொருள் கண்டார்.

'செயக்கடவ வல்லனவுஞ் செய்து மன் னென்பார்
நயத் தக்க நாகரிக மென்றும்.'

என்று நீதிநெறி விளக்கத்திலும் நாகரிக மென்னும் பதம் 'தாக்ஷணியம்' என்னும் பொருளிலேயே பிரயோகிக்கப் பட்டிருக்கிறது. அது கண்ணோட்டம் என்னும் தலைப்பினை யுடைய 58-ம் அதிகாரத்தின் இறுதிச் செய்யுளாகிய—

'பெயக் கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்'

என்பதே யாம். இந்த உயரிய குறளின் மெய்ப் பொருளான கண்ணோட்டமே (தாக்ஷணியமே) நாகரிகம்' என்னும் விழுப்பொருளை, தன் னகத்துக் கொண்டு நமது 'சாந்தசீலர்' என்னும் உண்மைக் கதை மிளிர்வதை அன்பர்கள் கவனிப்பார்களாக.

ஆதலால் திரிகரண சுத்தியுடன் தெய்வ பக்தி கொண்டு, சத்தியத்தையும் தருமத்தையும் கடைப் பிடித்து, அன்பும், அருளும் கண்ணோட்டமும் பொரு

ந்தி எவ்விடத்தும் நடுவு நிலைமை பூண்டு செம்மை யான நெறியில் நன்மையுற நடப்பதே 'நாகரிகம்' எனத் தேர்ந்து அதன்படி நடந்து மேனிலை யடைந்து வாழ நாமெல்லோரும் முயலுவோமாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

பண்டிதர்—செ. ரா. கணபதி சுப்ரமண்ய அய்யர்,
தமிழாசிரியர், போர்டு ஹை ஸ்கூல், கொள்ளேகாலம்.

---

17 வயது இந்தியரின் தைரியம்.

கராச்சியிலுள்ள இந்திய ஆகாயவிமான சங்கத்தைச் சேர்ந்த சுமார் 17-வயதுள்ள ஸ்ரீ. இஞ்சினீர் என்பவர் இம் மாதம் 3-ந்தேதி யன்று ரகஸ்யமாக ஆகாய விமானத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டுவிட்டார். அவர் பக்தாதையும் கடந்து கெய்ரோவுக்குச் சென்ற பிறகுதான் விஷயம் வெளியாயிற்று.

பதியை இழந்த சதி.

பூனாவிலிருந்து தியோலாலி பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்ற அந்தண உபாத்தியாயர் ஒருவர் தம் மனைவியாரோடு மோட்டார் பஸ் வண்டியில் புறப்பட்டார். வழியில் ரெயில்வே கேட்டுச் சாத்தப்பட்டிருக்க, திருகுவழியால் சடுதியிற் சென்று விடலாமென்று மதித்து பஸ்ஸைவிட்டு இறங்கினார்கள். முதலில் கணவனும் பிந்தி மனைவியுமாகச் செல்லுகையில், திடீரென லயனில் அந்நிமிஷம் வந்துகொண்டிருந்த ஷண்டிங் எஞ்சின் வண்டியானது கணவனைத் தள்ளி அறைத்து விட்டது. பின்புற மிருந்த மனைவி அப் பரிதாபக் காட்சியைக் கண்டு மனங் கலங்கித் தவித்தனள். உயிரோடு முன் சென்ற கணவனின் உடல் ரயில் பாதையில் நண்ட பிண்டலாகி கிரவிய கோரக் காட்சியைக் கண்ட மனைவியின் சித்தம் சரேலென பிரமித்துப்போய் விட்டது. என்னே! சதியின் முன் நேர்ந்த பதியின் கதி; இது திருவருளின் சாபக்கட்டே போலும்.

அதிக ஆசை அதிக நஷ்டம்

(முன் 96-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாலே போனவன் புதைய லிருக்கும் இடத்தை யடைந்து ஒன்றும் தெரியாதவன்போல் அந்த இடத்தைத் தோண்ட உட்கார்ந்தான். பின் "ஐயோ! குமரேசா! மோசம் போனோமே! இடம் தோண்டிக் கிடக்கிறது. யாரோ புதையலை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். கைக் கெட்டியது வாய்க் கெட்டாமல் போய்விட்டதே. என்னே பாபமிது!" என்று கத்தினான்.

குமரேசன்:- "ஐயோ! நம் அதிர்ஷ்டம் இப்படியா ஆகவேண்டும்? நாம் இன்னும் முன்னாடியே வந்திருக்கவேண்டும். நீ ஊருக்குப் போகாம லிருந்தால் முன்னாடியே வந்து எடுத்துக்கொண்டு போயிருக்கலாம். புதையல் இருந்தது ஒருவருக்கும் தெரியாதே! நாம் பேசிக்கொண்டிருந்ததை யாராவது ஒளிந்திருந்து கேட்டுக் கொண்டிருந்து வந்து எடுத்துப் போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் எப்படிப் போகும்? இனி என்ன செய்வது" என்று துக்கித்தான்.

முத்தையன் தானும் வருத்தப் படுகிறவனைப் போல் நடித்து, "என்ன செய்வது. நமக்குப் பிராப்தமில்லை" என்று குமரேசனுக்குத் தேறுதல் சொன்னான்.

குமரேசன்:-நீ வருவதற்குத் தாமத மானபோதே என் மனைவி "நாழிகையாய் விட்டதே. வேறு யாராவது

வந்து புதையலை எடுத்துக் கொண்டுபோய் விடப் போகிறார்களே! நீங்களாவது போய் எடுத்துக்கொண்டு வந்து வைத்திருந்து அவருக்கு (உனக்கு) பாதி கொடுத்துவிட்டு மறுபாதியை நாம் எடுத்துக்கொள்ளலாம்" என்றாள். நான் அப்படிச் செய்யாமற் போனேன். உன் வருகைக்கு எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தது பிசகாகப் போய்விட்டது.

முத்:- "அடடா, அப்படியாவது செய்திருக்கக் கூடாதா? நீ எடுத்துக்கொண்டு வந்திருந்து எனக்குக் கொடுக்காமல் நீயே வைத்துக் கொண்டிருந்த போதிலும் எனக்குப் பரம சந்தோஷமா யிருக்கும். நம்மிருவருக்கும் இல்லாம லல்லவா போய் விட்டது இப்போது?" என்று உண்மையில் வருத்தப்படுபவன்போல் நடித்துக் குமரேசனைப் பார்த்து "போனது போய் விட்டது. இனி வருத்தப்படுவதில் யாது பயன்! நாம் சுகமாகவிருக்கக் கொடுத்து வைக்கவில்லை. உழைக்கிற கட்டை என்றும உழைத்துத்தானே ஆகவேண்டும். கண்ணில் காட்டி இப்படி பிடுங்கிக்கொண்டு போகவேண்டுமா பாழுந் தெய்வம்! தெய்வத்தை நொந்து யாது செய்வது? எல்லாவற்றிற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா? போனது போய்விட்டது. இனி இங்கிருந்து என்ன செய்வது? நாழிகையாய் விட்டது. வீடுபோய்த் தூங்கவாவது தூங்கலாம். இதைப்பற்றி இங்கிருந்து வருத்தப் பட்டுக் கொண்டிருந்தால் நாளைக்கு உழைக்க வேண்டுமே! உழைக்கும்படி தலையில் எழுதின எழுத்து நம்மை விடவில்லை. இல்லாமற் போனால் கைக் கெட்டியது வாய்க் கெட்டாமற்

போவானேன். வருத்தப் படுவதில் பிரயோசன மில்லை. வா, வீடு போவோம்" என்றான்.

குமரேசன் தனக்குப் பிராப்த மில்லாமற் போனதைப்பற்றி மனதில் வருத்தப் பட்டுக்கொண்டும், முத்தையன் குமரேசனை ஏமாற்றித் தானே முழுப் புதையலையு மடைந்து விட்டதைப் பற்றி மனதில் சந்தோஷப் பட்டுக்கொண்டும் வீடு திரும்பினார்கள்.

முத்தையன், தனக்குள் "நாம் பணக்காரனாய் விட்டோம். இனி நாம் வேலை செய்வது கூடாது. குமரேசனையே நம்மிடம் வேலைக்காரனாக வைத்துக் கொள்ளவேண்டும். இவன் தான் வஞ்சனையில்லாமல் உழைப்பவன். நாளைக் காலையில் இவனையே வேலைக்குப் போகச்சொல்லிப் பார்ப்போம்" என்று எண்ணிக் கொண்டு, வெளிப்படையாய் "குமரேசா! நான் என் மகள் வீட்டிற்குப்போய் உடனே திரும்பியதால் மிகவும் சிரமமாயிருக்கிறது. நாளைக்காலை இறைப்பை நீயே பார்த்துக்கொள். மற்றவைகளைப் பிறகு பேசிக்கொள்ளலாம். தூங்கிவிடாதே; விடியற்காலையிலேயே எழுந்து போய்ப் பார்த்துக்கொள்" என்றான்.

குமரேசனும் "அப்படியே ஆகட்டும்" என்று ஒப்புக்கொள்ள, இருவரும் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்து தத்தம் வீடு நோக்கிச் சென்றனர்.

அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தபோதிலும், நாம் யாரையாவது ஒருவரைப் பின்பற்றித்தான் ஆகவேண்டி யிருக்கிறது. உலகத்தில் எப்பொழுதும் ஜனங்கள் பணக்காரனையே பின்பற்றுவது வழக்கமாத

லால், இங்கு நாமும் இப்போது நம் எழுத்தில் பணக்காரனா யிருக்கும் முத்தையனையே பின்பற்றிக் கவனிப்போம்.

முத்தையன் பேருவகை கொண்டவனாய்த் தன் வீட்டிற்குள் நுழைந்து, மனைவியை யழைத்து, "ஜாக்கிரதையா யிருக்கிறதா?" என்று விசாரித்து விட்டுத் தானும் விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு தண்ணீர்ப்பானை யடியை உற்று நோக்கினான். தான் வைத்துப்போனபடி சரியாயிருக்கக் கண்டு பேரானந்தங் கொண்டு மனைவியை யழைத்துத் தன் பக்கத்தில் உட்காரும்படி சொன்னான். அவளும் உட்கார்ந்தாள். "கோவணத்தில் ஒரு காசு இருந்தால், கோழிகூப்பிட ஒரு பாட்டு வரும்" என்பது பழமொழி யல்லவா? ஒரு காசே இப்பாடு படுத்திவைக்கிறதென்றால், லக்ஷக்கணக்காக விருக்கும் புதையல் முத்தையனை எப்பாடுபடுத்தி வைக்காது? "அடி, பகதூர் சிங்கத்தை என்னவென்று நினைத்தாய்! பார்த்தாயா அந்தப் பயல் குமரேசனுக்குச் சரியானபடி நாமம் போட்டுவிட்டேன். இனிப் புதையல் முழுதும் நம்முடையதுதான். இப்போது நாம் பணக்காரராய் விட்டோம். இனி நாம் வேலைசெய்வது சாத்தியமில்லை. இதை உத்தேசித்தே குமரேசனை விடியற்காலம் வயல் வேலைக்குப் போகும்படி திட்டப் படுத்திவிட்டேன்! அவனையே நம்மிடம் வேலைக்கு அமர்த்திக்கொள்வதாகவும் உத்தேசம் செய்திருக்கிறேன். நம்மூர் சின்னப் பண்ணை கிராமங்கள் விலைக்கு வந்திருக்கின்றன. கிராமங்கள் விலைக்கு வந்ததும் நமக்குப் புதையல் அகப்பட்டதும் பார்த்தாயா! நமது

அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! அந்தக் கிராமங்களை விலையைத் தூக்கி வைத்தாவது வாங்கிவிடவேண்டும். கிராமத்துக்கு ஐம்பது எருமாடும், 1000 ஆடுகளும் வாங்கவேண்டும். இப்போதிருக்கும் பண்ணை யாட்களை யெல்லாம் நீக்கிவிட்டு நாம் சொன்னபடி கேட்கும் படியான ஆட்களை நியமிக்க வேண்டும். இந்தப் பண்ணை மாடுகளை மேய்க்கவும், மற்ற காரியங்களை நிர்வகிக்கவும் மானேஜர் ஒருவனை நியமிக்கவேண்டும்.

மனைவி.—குறுக்கே சொல்றேன்னு கோவிக்காதீங்க; ஒரு வார்த்தை; எல்லாத்தையும் ஆருக்கு வேணுன்னாலுங் குடுத்துக்குங்கோ; இப்போ சொன்னீங்களே! அந்த மானேஜர் வேலையை என் தம்பி கதிரேசனுக்குத்தான் கொடுக்கணுங்க.

முத்தையன்—குறுக்குச் சால் ஓட்டுவதுதானே உன் வழக்கம். வாயை மூடிக்கொண்டு நான் சொல்வதைக் கேள். இப்போது நாம் பெரிய பண்ணை தனசிங்குக்குச் சமானமானவராய் விட்டோம்.

(வரும்)

A. Gopalaratnam Ayyar, Madras.

குடும்பத்தில் எழுவர் மரணம்

ஆகாரத்தில் விஷம்.

இலங்கையைச் சேர்ந்த யாழ்ப்பாணத்தில் ரயில்வே கார்டாக இருந்த தம்பையா என்பவர் சமீபத்தில் ஒரு நாள் ஆமையின் மாமிசத்தைக் கொண்டுவந்தார். அதைச் சமைத்து அக்குடும்பத்தார் சாப்பிட்டதில் அதில் இருந்த விஷத்தின் காரணமாக, அன்றும், மறு நாளிலுமாக எழுபேர் இறந்து விட்டார்கள். சைவ விரதத்தை யனுஷ்டிக்கும் ஒரு கிழவி அந்த ஆகாரத்தை உட்கொள்ளாததால் அக் குடும்பத்தில் அவள் மட்டும் பிழைத்தாள்.

முயற்சி திருவினையாக்கும்

இங்கிலாந்தில் ஜி. ஈ. ரயில்வேயில் பி. எச். பிங்கர் என்னும் பெயர் கொண்டவர் டிக்கட் கலெக்டராயிருந்து வந்தார். அவருடைய உள்ளத்தில் நாம் எப்பாடு பட்டாவது உயர்ந்த நிலைமையை யடைய வேண்டுமென்கிற எண்ணம் உதித்தது. அவர் தம்முடைய அந்த எண்ணத்திற் கேற்ற வழியைக் கவனித்தார். அவருக்குக் கணக்குப் பரிசோதகராக ஆகவேண்டுமென்கிற விருப்பமுண்டாயது. உடனே அந்த வழியில் முயற்சியைச் செலுத்தினார். நாடோறும் ஆபீஸில் தம்முடைய அலுவல்களை முடித்து வந்தபிறகு, கணக்குப் பரிசோதனைக் குரிய புத்தகங்களைப் படிப்பதில் ஊக்கமும் சிரத்தையும் எடுத்துக்கொண்டார். அப்பால் நாளடைவில் அந்தப் பரீக்ஷையில் தேறி இப்போது பிரபல கணக்குப் பரிசோதகராக விளங்குகிறார். அவருக்குப் பெரும் வருமானம் வருகிறது. பிரபுக்கள் பலருக்கு அவர் நண்பராயிருக்கிறார்.

பிள்ளைகளே! இதனாலே தான் "முயற்சி திருவினையாக்கும்" என்றார் பெரியோர். முயற்சி பயன் தராமற் போகாது. இதை உணர்ந்தவர் பலர் அதிர்ஷ்டத்தையும், தெய்வந் துணைசெய்யும் என்பதையும், விதியின்படி யெல்லாம் அமையும் என்பதையும், நினைத்துக் கொண்டு காலத்தை வீணாகக் கழிக்கின்றனர்.

சமாதானம்:—காட்டிலே தன்பாட்டில் படுத்துக் கிடக்கும் மலைப்பாம்பிற்கு ஆகாரம் அதனுடைய வாயண்டை வந்து சேரவில்லையா? கல்லிநுட் கிடக்கும் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் யார் உணவிடுகின்றனர்? அவை பிழைத்திருக்க வில்லையா? பிச்சைக்காரனொருவன் குதிரைப் பந்தயத்தில் ஏராளமான திரவியத்தை அடைகிறானல்லவா?—என்று கூறுகின்றனர்.

இப்படிப் பேசுவது வீணருடைய பேச்சாகும். நமக்குப் புத்தியையும் பலத்தையும் கொடுத்த கடவுளின் கிருபை யுண்டாக நாம் உழைத்தல் வேண்டும். உழைப்பவரிடமே கடவுள் கருணை பாராட்டுவார்.

சோம்பேறிகள் பிறரிடம் கோபங்கொள்வர். சோம்பேறி கடவுள் தனக்கு அளித்த பலத்தையும் புத்தியையும் வீணாக்குகிறானல்லவா? ஆகையினால் எப்போதும் முன்னேற்றத்திற்குரிய முயற்சியில் ஈடுபட்டிருத்தல் மிக அவசியமாகு மென்றுணர்க.

பகீரதன் கங்கை கொண்டுவந்ததும், துருவன் துருவபதம் பெற்றதும், மார்க்கண்டேயர் எமனை வென்றதும், எதனால்? முயற்சியினாலன்றோ?

இப்பொழுது தற்காலத்தில் காணப்படும் ஆகாய விமானம், புகைவண்டி, புகைக்கப்பல், இன்னும் இவை போன்ற பலவகையான வேலைப்பாடுகளெல்லாம் முயற்சியின் பயனால் விளைந்தவையன்றோ?

(சோமாஸ்கந்தன்)

ஒரு வர்த்தகனுக்கு இரண்டு மனைவிமா ரிருந்தனர். அவர்களில் மூத்தவள் ஏழை வீட்டுப்பெண். இளையவள் பணக்காரன் வீட்டுப்பெண். இதனால் இளையவள் தனக்கு மிஞ்சியவ ளில்லை யென்று கர்வங் கொண்டிருந்தாள். வர்த்தகனும் இளையவளிட மே பக்ஷமாயிருந்தான்.

இவர்கள் இருவருக்கும் ஒவ்வோர் ஆண்பிள்ளை யுண்டு. வர்த்தகன் தன் பிள்ளைகளிருவருக்கும் படிப்பு சொல்லிவைக்கும்படி ஒரு உபாத்தியாயரை நியமித்து வைத்து விட்டுத் தான் கப்பலேறிக் கடல் கடந்து வியாபாரஞ் செய்யப் போய்விட்டான்.

பின், அதிகாரம் முழுவதும் இளையவளிடம் இருந்தது. வாத்தியாருக்கு அவளே சம்பளம் கொடுப் பாள். ஒருநாள் இளையவளின் மகன் வாத்தியார் சொல்லி வைத்த பாடத்தை வாசிக்கத் தெரியாமல் விழித்தான். அதனால் வாத்தியார் அவனை அடித்தார்.

மூத்தவள் மகன் சரியாய்ப் படித்து விட்டான். அதனால் வாத்தியார் அவனை மெச்சிக்கொண்டார்.

அதுகண்ட இளையவள் மூத்தவள் மகனிடம் பொறாமை கொண்டாள்; அவனைப் பார்த்து, "நீ இவனை விடப் பெரியவன். அதனால் பாடம் வாசித்து விட்டாய். இனி உன்னிடம் புத்தகமொன்றுங் கொடுப்பதில்லை.

நீ பாடம் படித்துவிடு; பார்க்கிறேன் உன்சமர்த்தை” என்று கூறி, அவனுக்குப் புத்தகம் தராமல் வைக்கும்படி வாத்தியாருக்கு உத்தரவு செய்து விட்டாள். இரகசியமாய் இந்த “ஏழைச் சிறுக்கி மகனுக்குப் படிப்பென்ன? நீர் என் மகனைக் கவனியும். உமக்கு நல்ல வெகுமதி வாங்கித் தருகிறேன் ஐயாவிடம்” என்று சொல்லிவைத்தாள்.

பின், வாத்தியார் அவ்வாறே செய்தார். ஆனால் மூத்தவள் மகன் புத்தகம் பாராமலே வாத்தியார் போதிப்பதைச் செவியால் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்தான். அவனுக்குப் படிக்கவேண்டு மென்ற ஆவல் மனத்தில் குடிகொண்டிருந்தது. இளையவள் மகனுக்கு அந்த ஆவல் எள்ளளவுமில்லை. வாத்தியார் கட்டாயத்திற்காகப் படித்தான்.

இரண்டு வருஷங்களுக்கெல்லாம் வர்த்தகன், தன் இரண்டு பிள்ளைகளுடைய படிப்பைக் கவனித்தான். மூத்தவள் மகன், “சின்னம்மாள் எனக்குப் புத்தகந் தரக்கூடாதென்று வாத்தியாருக்குச் சொல்லிவிட்டாள். நான் காதால் கேட்டுக் கொண்டே படித்தேன்; படிப்பு வந்துவிட்டது. இதற்குச் சின்னம்மாள்தான் காரணம்,” என்று கூறி அவளை வணங்கினான்.

பின் வர்த்தகனுக்கு நடந்தவிஷயம் தெரியவந்தது. தன் இளைய மனைவியிடம் பொறுமைக்குண மிருப்பதினால் அவளிடம் கொண்டிருந்த பிரியத்தை மறந்தான். கேள்வியினாலே படிப்பைக் கற்றுக்கொண்ட குழந்தையும் அவனைப் பெற்ற அன்னையையும் நல்ல நிலைமையில் வைத்து ஆதரித்தான்.

210784

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

வருட சந்தா தபாற் கூலி உட்பட	இந்தியா, பர்மா, சிலோன்	... ரூ. 1 8 0
	பிறங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு	... ரூ. 2 0 0
தனிச்சஞ்சிகை	... ... விலை	ரூ. 0 2 0

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும். ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானால் அணா மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

விளம்பர விகிதம்

ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு		...ரூபா 10—0—0
அரைப் பக்கத்திற்கு	,,	... ரூபா 5—0—0

காண்டிராக்ட் ரேட்டானால் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

அமிர்தாஞ்சனம்

சர்வ நோய்க

வலித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

எல்லா நோய்களுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் டிப்போ,

7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.

Vavilla Press ,Madras.